# J/ URUMPIRAI HINDU COLLEGE
# யா / உரும்பிராய் இந்துக் கல்லூரி

# ஸ்தாபகர் தினமும், பரிசில் நாளும்






## 2018

*யா/உரும்பிராய் இந்துக் கல்லூரி*

# ஸ்தாபகர் தினமும் பரிசில் நாளும்
# 2018

காலம் : 03.04.2018 செவ்வாய்க்கிழமை

நேரம் : காலை 9.00 மணி

இடம் : கல்லூரி நூற்றாண்டு மண்டபம்

**தலைமை**

திரு.அ.அருணந்திசிவம் (கல்லூரி முதல்வர்)

**பிரதம விருந்தினர்**

பேராசிரியர் துரைமனோகரன் அவர்கள்
(பழைய மாணவர், முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர்
பேராதனைப் பல்கலைக்கழகம்)

**சிறப்பு விருந்தினர்**

திரு.நா.சிவனேசன் அவர்கள்
(கோட்டக்கல்விப் பணிப்பாளர், கோப்பாய்)

**ஸ்தாபகர் நினைவுப் பேருரை**

கவிமணி க.ஆனந்தராசா அவர்கள்
(அன்னை தாசன், ஓய்வுநிலை அதிபர்)

**பரிசில் வழங்கல்**

திருமதி கனகாம்பிகை துரைமனோகரன் அவர்கள்
(ஓய்வுநிலை பிரதி அதிபர்)

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**

- கல்லூரிச் சமூகம் -
யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி

## நிகழ்ச்சி நிரல்

- விருந்தினர்களை அழைத்துவரல்.
- மங்கல விளக்கேற்றல்
- தேசியக்கொடி ஏற்றல் - பிரதமவிருந்தினர்
- பாடசாலைக்கொடி ஏற்றல் - கல்லூரி முதல்வர்
- இறைவணக்கம்
- தமிழ்தாய் வாழ்த்து
- வரவேற்பு நடனம்
- வரவேற்புரை - ஆசிரியர் திரு.இ.ஜோ.சுதர்சன்
- ஆசியுரை
  - கற்பக விநாயகர் ஆலய பிரதம குரு
  - புனித மைக்கேல் ஆலய பங்குத் தந்தை
- அதிபர் அறிக்கை
- பேச்சு(தமிழ்) – டே.றொசானி (தரம் 12 மாணவி)
- ஸ்தாபகர் நினைவுப்பேருரை
- பேச்சு (ஆங்கிலம்) – ரா.கிரிசானி(தரம் 12 மாணவி)
- சிறப்பு விருந்தினர் உரை
- பரிசில் வழங்கல்
- பிரதம விருந்தினர் உரை
- நன்றியுரை–ஆசிரியை திருமதி. அ.செந்தில்குமார்
- பாடசாலைக் கீதம்

# எமது அதிபர்
# OUR PRINCIPAL



**Mr. A. Arunanthisivam (SLPS I)**
**B.A (Hons), PGDE**

# அதிபர் அறிக்கை

***பங்குனி 2017 – பங்குனி 2018***

எல்லாம் வல்ல கற்பகவிநாயகப் பெருமானின் பாதாரவிந்தங்களை வணங்கி கல்லூரியின் ஸ்தாபகர் அமரர் கலாநிதி வல்லிபுரம் அவர்களை மனதிலே இருத்தி 2018ம் ஆண்டுக்கான அதிபர் அறிக்கையினை உங்கள் முன் சமர்ப்பிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

எமது கல்லூரியின் ஸ்தாபகர் தினம், பரிசளிப்பு நாள் ஆகிய இன்றைய நிகழ்வுகளுக்கு ஆசியுரை வழங்க வருகை தந்துள்ள வணக்கத்துக்குரிய சிவாச்சாரியார் அவர்களே, வணக்கத்துக்குரிய தேவாலய பங்குத்தந்தை அவர்களே எமது அழைப்பினை ஏற்று பிரதம விருந்தினராக வருகை தந்து விழாவினை சிறப்பித்துக் கொண்டிருக்கும் கல்லூரியின் பழைய மாணவன்பேராதனைப் பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் துரை மனோகரன் அவர்களே! அவரது துணைவியார் ஓய்வுநிலை பிரதி அதிபர் திருமதி.கனகாம்பிகை துரை மனோகரன் அவர்களே! சிறப்பு விருந்தினராக வருகை தந்து விழாவினை சிறப்பித்துக் கொண்டிருக்கும் கோப்பாய் கோட்டக்கல்விப் பணிப்பாளர் திரு.நா.சிவநேசன் அவர்களே! ஸ்தாபகர் நினைவுப் பேருரையை ஆற்ற வந்துள்ள ஓயவுநிலை அதிபர் அன்னைதாசன் கவிமணி க.ஆனந்தராசா அவர்களே! மற்றும்

அயற்பாடசாலை அதிபர்களே ஆசிரியர்களே எமது கல்லூரியின் பழைய மாணவர்களே ஆசிரியர்களே அன்பான மாணவச் செல்வங்களே உங்கள் அனைவருக்கும் எனது அன்பான வணக்கங்கள்.

இன்றைய விழாவின் பிரதம விருந்தினர் மதிப்பிற்குரிய பேராசிரியர் துரை மனோகரன் அவர்கள் எமது கல்லூரியில் கல்விகற்ற பழைய மாணவர். ஒன்பதாம் வகுப்பிலிருந்து 1969ம் ஆண்டு பேராதனைப் பல்கலைக்கழகம் புகும்வரையும் இக்கல்லூரியிலேயே படித்தவர். அக்காலத்தில் 9ம் வகுப்பிலேயே கலைப்பிரிவு, விஞ்ஞானப்பிரிவு என பிரித்து படிப்பிப்பார்கள். ஆசிரியர்களின் விருப்பம் காரணமாக விஞ்ஞான பிரிவில் கற்ற இவர் தமிழ் இலக்கியங்கள் மீது கொண்ட விருப்பம் காரணமாக கலைப்பிரிவிற்கு மாறி தமிழ் பாடத்தை தனது முதலாவது விருப்பிற்குரிய பாடமாக கற்றவர். படிக்கும் போதே பல விமர்சன கட்டுரைகளையும் கவிதைகளையும் எழுதி ஆசிரியர்களிடம் பாராட்டு பெற்றதோடு போட்டிகளிலும் பங்குபற்றி முதற் பரிசில்களை பெறுபவர். பல நாடகங்களை எழுதி தானும் நடித்து இரசித்தவர். மல்லிகை, விவேகி என்ற சஞ்சிகைகளில் மாணவனாக படித்துக் கொண்டிருக்கும் போதே பல கவிதைகளை எழுதிய இவர் "பார்வையின் பரிசு" என்ற நாவலை எழுதி எமது கல்லூரியிலேயே நூல் வெளியீட்டு விழாவினையும் செய்தவர். பேராதனைப் பல்கலைக்கழகத்தின்

தமிழ் துறைக்கு தலைவராக இருந்து "ஈழத்து இலக்கிய தரிசனம்","பார்வையும் பதிவும்","பழம்புனலும் புது வெள்ளமும்","பள்ளி இலக்கியலும் பாமரர் வாழ்வியலும்", "இலங்கையில் தமிழ் இலக்கிய வளர்ச்சி" என பல் நூல்களை எழுதி வெளியிட்ட பெருமைக்குரியவர். தற்போதும் "ஞானம்" சஞ்சிகையில் பல சமகால நிகழ்வுகளை எழுத்துருவில் வடித்து வரும் இவர் யாழ்ப்பாணம் மற்றும் வேறு பல்கலைக்கழகங்களில் பகுதிநேர விரிவுரையாளராக கடமையாற்றி தமிழ் மொழியை வளர்த்துவரும் மதிப்பிற்குரிய பேரறிஞர் பேராசிரியர் அவர்கள் பாடசாலை எதுவாக இருந்தாலும் ஆசிரியர்களுக்கு கீழ்ப்பணிந்து கடின முயற்சியோடு சுய கற்றலில் ஆர்வத்துடன் ஈடுபட்டால் முன்னிலைக்கு வர முடியும் என்பதற்கு ஓர் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குபவர். அன்பான மாணவர்களே மதிப்பிற்குரிய பெற்றோர்களே நகர்ப்புற பாடசாலையை தேடி ஓடுவதை விட்டு முயற்சியுடன் ஊக்கமாக கற்கும் போது எதிர்காலம் வளமாக அமையும் என்பதைக்கூறி, உரும்பிராய் இந்துக் கல்லூரியில் கற்று பேராசிரியராக முன் உதாரண புருஷராக திகழும் எமது பிரதம விருந்தினர் பேராசிரியர் துரை மனோகரன் அவர்களையும் அவரது அன்புத் துணைவியார் ஓய்வுநிலை பிரதி அதிபர் கனகாம்பிகை துரை மனோகரன் அவர்களையும் வருக வருக என வரவேற்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

எமது இன்றைய விழாவின் சிறப்பு விருந்தினர் கோப்பாய் கோட்ட கல்விப் பணிப்பாளர் பெருமதிப்பிற்குரிய திரு.நா.சிவநேசன் அவர்கள் கொக்குவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவர். தனது ஆரம்ப இடைநிலைக் கல்வியை கொக்குவில் இந்துக் கல்லூரியில் கற்று யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் கலைமாணிப் பட்டத்தினையும் தேசிய கல்வி நிறுவனத்தில் பட்டப்பின் கல்வி டிப்ளோமாவையும் பின் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் முதுகல்விமாணிப் பட்டத்தினையும் பெற்றவர். 1990ம் ஆண்டு ஆசிரியப் பணியில் ஈடுபட்ட இவர் 1998 முதல் அதிபராக கடமையாற்றி 08.06.2016 தொடக்கம் கோப்பாய் கோட்ட கல்விப்பணிப்பாளராக சேவையாற்றி வருகிறார். கோப்பாய் கோட்டத்திலுள்ள அனைத்து பாடசாலைகளின் வளர்ச்சிக்காக தன்னை அர்ப்பணித்து சேவையாற்றி வருபவர். இவர் இப்பரிசில் நாளில் சிறப்பு விருந்தினராக கலந்து சிறப்பிப்பது எமது கல்லூரிக்கு பெருமையளிக்கின்றது. இவரையும் இந்நாளில் வருக வருக என வரவேற்பதில் பெருமகிழ்வடைகின்றேன்.

ஸ்தாபகர் நினைவுப் பேருரையை ஆற்ற வருகை தந்துள்ள மதிப்பிற்குரிய அன்னைதாசன் கவிமணி க.ஆனந்தராசா அவர்கள் அயற்பாடசாலையான சந்திரோதயா வித்தியாலயத்தில் அதிபராக கடமை புரிந்து ஓய்வு பெற்றவர். எமது கல்லூரியின் களநிலை பற்றி நன்கு அறிந்தவர். தமிழ் மீதும் சைவ சமயம் மீதும் மிகுந்த பற்றும் ஈடுபாடும் கொண்டவர். எமது கோரிக்கைக்கு எதுவித மறுப்பும் இன்றி விருப்புடன் ஸ்தாபகர் நினைவுப் பேருரையை ஆற்ற வந்திருக்கும் அவரையும் வருக வருக என வரவேற்கின்றேன்.

***மாணவர் தொகையும் ஆசிரிய ஆளணியும்***

எமது கல்லூரியில் தரம் 6 முதல் தரம் 13 வரை வகுப்புக்கள் நடைபெறுவதோடு உயர்தர வகுப்பில் கணிதம், விஞ்ஞானம், வர்த்தகம், கலை என நான்கு பிரிவுகளில் மாணவர்கள் கற்கின்றனர். 146 ஆண் பிள்ளைகளும் 156 பெண் பிள்ளைகளுமாக மொத்தம் 302 மாணவர்கள் தற்போது கல்வி கற்கின்றனர். ஒரு1AB பாடசாலைக்கு இந்த மாணவர் தொகை குறைவானதே. இருக்கும் மாணவர்களின் தேசிய பரீட்சைப் பெறுபேறுகள் உயரும் பட்சத்தில் மாணவர்களின் புதிய அனுமதியும் உயர்வடையும். இவ்வாண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற உரும்பிராய் றோ.க.த.க பாடசாலை மாணவர் மூவர் உட்பட மொத்தம் 40 மாணவர்கள் தரம் 6 ற்கு புதிய அனுமதி பெற்றுள்ளமை குறிப்பிடத் தக்கது. அவர்களை இக்கல்லூரியில் அனுமதிக்க ஆலோசனை வழங்கிய அப்பாடசாலை அதிபருக்கும் அனுமதித்த பெற்றோருக்கும் எனது நன்றிகளும் பாராட்டுக்களும்.

தரம் 1 ஐ சேர்ந்த அதிபர், மற்றும் தரம் III ஐ சேர்ந்த பிரதி அதிபர் உட்பட ஆண் ஆசிரியர்கள் 14 பேரும், பெண் ஆசிரியர்கள் 18 பேரும் ஆக மொத்தம் 32 பேர் தற்போது கடமை புரிந்து வருகின்றனர்.

நிர்வாக மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகளை என்னுடன் சேர்ந்து பிரதி அதிபர் திரு.த.நவீந்திரன், உப அதிபர் திரு.செ.பகீரதன், பகுதித் தலைவர்கள் திருமதி.பவானி தியாகலிங்கம், திரு.செ.குணரத்தினம் ஆகியோரும் ஆற்றி வருகின்றனர். இவர்களுடன் முகாமைத்துவ குழு, ஒழுக்காற்று குழு திட்டமிடல் குழு என பல தரப்பினரும் இணைந்து தத்தம் பணிகளை சிறப்புடன் ஆற்றி வருகின்றனர். இவர்களுடன் ஏனைய எல்லா ஆசிரியர்களதும் தன்னலமற்ற சேவையினை இந்நாளில் மனமுவந்து பாராட்டுவதோடு அவர்களின் வாண்மை விருத்திக்கும் வாழ்க்கைச் செழிப்பிற்கும் எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிய வேண்டுகின்றேன். இந்த அறிக்கைக் காலப்பகுதியில் ஆசிரியர்கள் எவரும் வருகை தராமையும், மாற்றம் பெற்று செல்லாமையும் குறிப்பிடத்தக்கது.

***கல்விசாரா ஆளணியினர்***

எமது கல்லூரியில் விஞ்ஞான ஆய்வுகூட உதவியாளர் ஒருவர், பாடசாலைப் பணியாளர் ஒருவர், பாடசாலைத் தொழிலாளர் இருவர் என கல்விசாரா ஆளணியினர் 04 பேர் கடமை புரிகின்றனர். இவர்களது சிறப்பான சேவையை பாராட்டுவதோடு இவர்களது பணி சிறக்கவும் வாழ்த்துகிறேன். இரவு நேர காவலாளி ஒ்ருவர் நியமிக்காமை பெரும் குறைபாடாகும்.

*பௌதீகவள அபிவிருத்தி*

எமது கல்லூரியின் பௌதீகவள அபிவிருத்தியில் கல்வித் திணைக்களம், பழைய மாணவர்கள், அரசியல் தலைவர்கள், நலன் விரும்பிகள் என பலரது பங்களிப்பும் குறிப்பிடத்தக்கது. கடந்த ஆண்டு "அருகிலுள்ள பாடசாலை மிகச் சிறந்த பாடசாலை" என்னும் NSBS திட்டத்தின் கீழ் 18 லட்சம் ரூபா செலவில் வகுப்பறைக் கூரை, நிலம், ஆய்வுகூடங்கள் என்பன திருத்தியமைக்கப்பட்டதோடு 13 லட்சம் ரூபா செலவில் மேற்கொள்ளப்பட்டு வந்து ஆண், பெண் பிள்ளைகளுக்கான மலசல கூடங்கள் அமைக்கும் பணிகளும் பூர்த்தி செய்யப்பட்டு தற்போது அவை மாணவர்களின் பாவனைக்காக பயன்படுத்தப்படுகின்றது. மத்திய கல்வி அமைச்சினால் வகுப்பறை கற்பித்தல் செயற்பாட்டிற்காக 6x4 அளவு கொண்ட 20 White Board கள் கிடைக்கப்பெற்றன.

2017 ம் ஆண்டின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியின் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட அப்போதைய வடமாகாண சபை உறுப்பினரும் தற்போதைய வட மாகாண கல்வி அமைச்சருமான கௌரவ கலாநிதி கந்தையா சர்வேஸ்வரன் அவர்களிடம் நாம் வழங்கிய கோரிக்கைக்கு அமைய மாகாண சபைக்கான ஒதுக்கீட்டு நிதியின் கீழ் 75000/= க்கு Multi media projector (பல்லூடக எறியி) ஒன்றும் அதற்கான திரை மற்றும் White

Board என்பனவும் கிடைக்கப்பெற்றன. எமது கோரிக்கையை கருத்தில் கொண்டு அவற்றை வழங்கிய கல்வி அமைச்சர் அவர்களுக்கு கல்லூரி சமூகத்தினர் சார்பில் நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதேபோன்று கடந்த ஆண்டு நடைபெற்ற பரிசில்நாளுக்கு பிரதம விருந்தினராக கலந்து கொண்ட பழைய மாணவர் கட்டிட பொறியியலாளர் திரு.சத்தியநாதன் சசிகுமார் அவர்கள் தனது அன்பளிப்பாக Multi Media Projector (பல்லூடக எறியி) ஒன்றை வழங்கியுள்ளார். அதனை வழங்கிய திரு.ச.சசிகுமார் அவர்களுக்கும் கல்லூரி சமூகத்தினர் சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

வலயக்கல்வி அலுவலக உத்தியோகத்தர்களின் சிபார்சுக்கு அமைய எமது பாடசாலை தெரிவு செய்யப்பட்டு சிங்கர் கம்பனியின் அன்பளிப்பாக 75000/- பெறுமதி Gas cooker, oven போன்ற சமயலறைக்கான நவீன தொழில்நுட்ப பொருட்கள் எமது கல்லூரிக்கு கிடைத்தன. மனைப் பொருளியல் பாட ஆசிரியரின் சிறந்த செயற்பாடு, கல்வி அதிகாரிகளுடன் எமது நன்மதிப்புடனான நல்லுறவு என்பன காரணமாக மேற்படி பொருட்கள் எமக்கு கிடைக்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. மனைப்பொருளியல் பாட மாணவர்களுக்கும் ஆசிரியருக்கும் எனது பாராட்டுக்கள்.

மேலும் மாணவர்களின் வாசிப்புத் திறனை மேம்படுத்தவும் ஆசிரியர்களின் கற்றல் கற்பித்தலை மேம்படுத்தவுமென நூலக அபிவிருத்திக்கு புத்தக கொள்வனவுக்காக 2,15,000/- வும் புத்தக அலுமாரி கொள்வனவுக்காக 25,000/=என மொத்தம் 2,40,000/- வை கல்வி அமைச்சு நேரடியாக எமக்கு வழங்கியுள்ளது. அலுமாரிகொள்வனவு செய்யப்பட்டதோடு புத்தகங்களையும் கொள்வனவு செய்துள்ளோம். இதன் மூலம் மாணவர்களின் வாசிப்பு திறன் மேம்படுவதோடு தேசிய பரீட்சைகளுக்கு தம்மை தயார்ப்படுத்த, தேடிக் கற்க மாணவர்கள் விருப்புடன் நூலகத்திற்கு செல்வதை காண முடிகின்றது.

மேலும் விளையாட்டு துறையை வலுப்படுத்தி மாணவர்கள் உற்சாகத்தோடு ஈடுபட கோலூன்றி பாயும் கம்பம் ஒன்றை பெற்றுத்தருமாறு லண்டன் வாழ் பழையமாணவர்களிடம் கோரிக்கை விடுத்த போது 2 லட்சம் ரூபா பெறுமதியான கம்பம் ஒன்றினை வெளிநாட்டிலிருந்து நேரடியாக வரவழைத்து எமக்கு வழங்கிய பழைய மாணவர் திரு.க.தர்மகுலசிங்கம் அவர்களுக்கும் எனது நன்றிகள். எதிர்காலத்தில் அதனை பயன்படுத்திய மாணவர்கள் பய்றிசியில் ஈடுபட்டு போட்டிகளில் பங்கு கொள்ளவும் வெற்றி பெறவும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

***கல்வி அபிவிருத்தி***

கடந்த 2017 ஆம் ஆண்டு ஆவணி மாதத்தில் உயர்தர பரீட்சைக்குத் தோற்றியவர்களில் 08 மாணவர்கள் கலைத்துறையிலும் 01 மாணவி வர்த்தகத் துறையிலும் பல்கலைக்கழக அனுமதிக்கான தகுதியைப் பெற்று கல்லூரிக்கு பெருமை சேர்த்துள்ளனர். 1A, 1B, 1C பெறுபேற்றினை மாணவி க.லக்சிகா அவர்களும் 3B பெறுபேற்றினை மாணவன் த.வேணுஜன் அவர்களும் பெற்றுள்ளனர். இவர்களுக்கும் சித்தியடைந்த ஏனைய மாணவர்களுக்கும் இவர்களுக்கு கற்பித்த ஆசிரியர்களுக்கும் எனது பாராட்டுக்கள்.

அதேபோன்று அண்மையில் வெளியான 2017 க.பொ.த (சா/தர) பரீட்சைக்குத் தோற்றிய 36 மாணவர்களில் 12 மாணவர்கள் உயர்தரம் கற்கும் தகுதியைப் பெற்றுள்ளனர். மேலும் மூவர் கணித பாடத்தில் சித்திபெற்றபோதும் ஏனைய பாடங்களில் போதிய திறமைச் சித்தியினைப் பெறவில்லை. அதிசிறந்த பெறுபேறாக மாணவன் ஸ்ரீ.நிதுசன் அவர்கள் 7A, 1B யினைப் பெற்றுள்ளார். மேலும் யோ.திவியா 5A,1B,2S, ஜோ.லிண்டா 4A,2B,3C றே.டெசியா 3A,1B,2C,2S பெறுபேற்றினைப் பெற்று கல்லூரிக்குப் பெருமை சேர்த்துள்ளனர்.

***இணைப்பாடவிதான செயற்பாடுகள்***

மாணவர்களின் உடல் உள ஆற்றல்களை விருத்தி செய்து அவர்களை சமூகமயமாக்கல் செயற்பாட்டில்பிரதான பங்கு வகிப்பன இணைபாடவிதான செயற்பாடுகளே. ஒவ்வொரு வருடத்தினைப் போன்று இவ்வருடமும் ஆண், பெண் மாணவர்களுக்கான வீதி ஓட்ட நிகழ்வுகள்,வருடாந்த இல்லமெய்வன்மைப் போட்டி நிகழ்வுகள் என்பன மிகச்சிறப்பாக நடைபெற்றன. கடந்த ஆண்டு நடைபெற்ற கோட்டமட்ட போட்டியில் குண்டு போடுதல் போட்டியில் 1ம் இடத்தையும்,ஈட்டிஎறிதல் போட்டியில் முதலாம் இடத்தையும், இரண்டாம் மற்றும் மூன்றாம் இடத்தையும் பெற்றனர். நீளம் பாய்தல் போட்டியில் 2ம் இடத்தையும் 4x100 அஞ்சல் ஓட்டப் போட்டியில் 2ம் இடத்தையும், 4x200 அஞ்சல் ஓட்டப் போட்டியில் 2ம் இடத்தையும் எமது மாணவர்கள் பெற்று கல்லூரிக்குப் பெருமை சேர்த்து வலயமட்ட போட்டிகளில் கலந்து கொண்டனர்.

அதேபோன்று பெண்களுக்கான கராத்தே போட்டியில் இங்கு கற்கும் கருணை இல்லத்தைச் சேர்ந்த மாணவிகள் குழு காட்டாவில் வலய மட்டத்திலும் குழு குமிதோவில் வலய மட்டத்திலும் 1ம் இடங்களை பெற்று மாகாண மட்ட போட்டியில் 2ம் இடங்களையும் பெற்றனர். அதே போன்று கணித ஒலிம்பியாட் போட்டி பிரிவு 1ல் பங்கு கொண்ட தரம் 6 மாணவி க.சியானிகா அவர்கள் கோட்ட, வலய

மட்டங்களில் 2ம் இடத்தை பெற்றார். சைவநெறிப் போட்டிகளில் தரம் 12 மாணவி சி.கீதா பண்ணிசைப் போட்டியில் கோட்ட மட்டத்தில் 1ம் இடத்தையும் வலய மட்டத்தில் 2ம் இடத்தையும் பெற்றார். ஆங்கில மொழிப் போட்டியில் மூன்று மாணவர்கள் 2ம் இடங்களையும், இரண்டு மாணவர்கள் 3ம் இடங்களையும் பெற்றனர். தமிழ் மொழித் தினப் போட்டியில் பங்குபற்றிய மாணவர்களில் ஒருவர் 1ம் இடத்தையும் இருவர் 2ம் இடங்களையும் பெற்றதோடு குழு இசை பிரிவு 3ல் கலந்து கொண்ட மாணவர்கள் 3ம் இடத்தையும் பெற்றுக் கொண்டனர். தனி நடனம் பிரிவு 4ல் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்ட தரம் 12 மாணவி பெ.கஜனா அவர்கள் வலயம் மட்டத்தில் 3ம் இடத்தைப் பெற்றுக்கொண்டார். இவ்வாறு கோட்ட, வலய மட்டப் போட்டிகளில் பங்குபற்றி வெற்றி பெற்ற மாணவர்களையும் அவர்களை நெறிப்படுத்திய ஆசிரியர்களையும் இவ்வேளையில் பாராட்டுகின்றேன்.

***2ம் மொழி சிங்கள கற்கை***

எமது கல்லூரியில் கற்கும் தரம் 6 முதல் 9 வரையான மாணவர்களுக்கு சிங்கள மொழி கற்பித்தலை மேற்கொண்டு வருகின்றோம். பாடசாலை நேரத்திலேயே வாரத்தில் 2 பாடவேளைகளில் சிங்கள மொழி கற்பித்தல் நடைபெறுகின்றது. இலவச பாடநூல்களை பெற்றுள்ள மாணவர்கள் தற்போது சிங்களம் எழுத, வாசிக்க தெரிந்துள்ளமை பாராட்டத்தக்கது. 2ம் மொழிப் போட்டியில்

மாணவர்கள் பாடல் மற்றும் வாசிப்புப் போட்டிகளில் பங்குபற்றி தரம் 8 மாணவன் T.அனிஸ்ரன் அவர்கள் வாசிப்பு போட்டியில் வலய மட்டத்தில் 1ம் இடத்தைப் பெற்று மாகாணமட்ட போட்டிக்கு வவுனியா சென்று பங்குபற்றி சான்றிதழையும் பெற்றுக்கொண்டார். இன்று நமது நாட்டில் மொழி தெரியாததால் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கும் நிலையைமாற்றி மாணவர்களை எழுத வாசிக்க பழக்கும் ஆசிரியர்களான திரு.வ.ஜெகநாதன், செல்வி.ச.ஜெயந்தி ஆகிய இருவருக்கும் எனது பாராட்டுக்கள்.

***மெல்லக் கற்கும் மாணவர்களுக்கான விசேட கல்விச் செயற்பாடு***

தரம் 6 ற்கு வருகை தந்த போதும் அவர்களில் சிலர் எழுத வாசிக்க தெரியாத நிலை இருப்பதை அவதானித்து அவர்களுக்காக காலை, மாலை நேரங்களில் விசேட கல்விச் செயற்பாடாக மேலதிக வகுப்புக்கள் நடைபெறுகின்றன. வழிகாட்டலும் ஆலோசனைக்கும் பொறுப்பான ஆசிரியை வசந்தி வைத்திலிங்கம் அவர்களின் தலைமையில் ஏனைய ஆசிரியர்களும் சேர்ந்து இந்த மேலதிக வகுப்பை நடாத்தி வருகின்றனர். மாணவர்களின் தேவை கருதி இம் மாணவர்களுக்கு பால் மற்றம் சிற்றூண்டிகளை தமது சொந்த செலவில் வழங்கி கற்பித்தலில் ஈடுபடுவதால் அவர்கள் விருப்புடன் வந்து கற்பதோடு அவர்களின் அடைவு மட்டத்தில் திருப்திகரமான வெற்றியையும் கண்டு வருகின்றோம். சிற்றுண்டிகளை வழங்கி கற்பித்தலில் ஈடுபடும் ஆசிரியர்கள் அனைவருக்கும் எனது பாராட்டுக்கள்.

***பழைய மாணவர்கள்***

கல்லூரியின் அனைத்து செயற்பாடுகளுக்கும் பக்க பலமாக நின்று உதவி செய்பவர்கள் பழைய மாணவர்களே. லண்டன் வாழ் பழைய மாணவர்கள், கனடாவாழ் பழைய மாணவர்கள் ஆகியோரின் நிதி உதவியை பெற்று கல்லூரியின் அபிவிருத்தியினையும் மாணவர் நலன்களையும் மேற்கொண்டு வரும் பழைய மாணவர் சங்கத்தின் செயலாளராக ஓய்வுநிலை ஆசிரியர் திரு.க.கிருஸ்ணானந்தன் அவர்களும் பொருளாளராக ஓய்வுநிலை வங்கி முகாமையாளர் திரு.செ.நாகரட்ணம் அவர்களும் இணைப்பாளராக திரு.S.சிவபாலன் அவர்களும் பெரும்பங்காற்றி வருகின்றனர். இவர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

தரம் 6 அனுமதி பெறுவோருக்கு
புலமைப்பரிசில் சித்தி பெற்றவருக்கு
ஒருவருக்கு 3 x 5000 = 15000.
37 x 1000 = 37000
52000.

O/L சித்தி பெற்றவர்களுக்கு
40500/=
A/L – 14000
106500

***கல்லூரித்தேவைகள்***

1. ஆசிரியர்களின் மோட்டார் சைக்கிள் மழையிலும் வெய்யிலிலும் நிற்பதால் உரிய வாகன தரிப்பிட வசதி ஏற்படுத்த வேண்டியுள்ளது.
2. மாணவர்களின் துவிச்சக்கர வண்டித் தரிப்பிடம் கூரை திருத்தி நிலம் செப்பினிட்டு சீமெந்து போட வேண்டியுள்ளது.
3. வீளையாட்டு மைதானத்திற்கு குடிநீர் வசதி மலசலகூட வசதி என்பவற்றை ஏற்படுத்தி மாணவர்களின் விளையாட்டு செயற்பாட்டை வலுவாக்குதல்.
4. பாண்ட் வாத்திய மாணவர்களின் சீருடைகள், தொப்பிகள் என்பன நீண்டகாலப் பாவனை காரணமாக பழுதடைந்திருப்பதால் புதிய சீருடைகள் தைத்து பாண்ட் அணிக்குழுவை மேலும் சிறப்பானதாக மாற்றி அமைத்தல்.
5. கல்லூரியின் பின்புறமாக உள்ள வேலியில் 400 அடி நீளத்திற்கு மதில் கட்டி பாதுகாப்புடன் கூடிய கவின் நிலையை ஏற்படுத்துதல்.

இறுதியாக பெரு மதிப்பிற்குரிய பெற்றோர்கள் உங்கள் பிள்ளைகளின் கல்வி மேம்பாட்டிற்கு உதவ நாம் என்றும் தயாராக உள்ளோம். எம்முடன் ஒத்துழைத்து அக்கறை காட்டி பிள்ளைகளின் முழுமையான வரவினை உறுதிப்படுத்துவதோடு அவர்கள் வீட்டில் சுயகற்றலில் ஈடுபட வசதிகள் ஏற்படுத்தி கொடுங்கள். “கல்வி இல்லாமல்

வாழ்க்கை இல்லை'' என்பதை நீங்கள் மறந்திடாதிருப்பதோடு உங்கள் பிள்ளைகளுக்கும் உணர்த்துங்கள்.
பாடசாலை தேவை அறிந்து சேவைகள் நல்கிடும் பழைய மாணவர்கள் பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினருக்கு நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

இன்றைய பரிசில் நாள் நிகழ்விற்கு ஞாபகார்த்த அன்பளிப்புக்களை வழங்கிய அனைவருக்கும் வருகை தந்த பிரதம விருந்தினர்கள் சிறப்பு விருந்தினர்கள் ஏனைய பெற்றோர்கள், பழைய மாணவர்களுக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்றி

அ.அருணந்திசிவம்
அதிபர்
03.04.2018

# பரிசளிப்பு விபரம்

## தரம் 06

| | |
|---|---|
| க.சியானிகா | கணிதம் 1ம் இடம், தமிழ் 3ம் இடம், ஹோ.க 1ம் இடம் , விஞ்ஞானம் 2ம் இடம், வரலாறு 3ம் இடம் |
| எ.சஜின்மிஸ்ரிகா | தமிழ் 1ம், ஹோ.க 2ம், கணிதம் 2ம், விஞ்ஞானம் 3ம், வரலாறு 1ம், ஆங்கிலம் 1ம், நடனம் 1ம், புவியியல்2ம், குடியுரிமை3ம், செயன்முறை தொ.நு 3ம், சுகாதாரம் 3ம், சிங்களம் 1ம் |
| சி.சிவானுஜன் | தமிழ் 3ம், விஞ்ஞானம் 1ம், வரலாறு 2ம், ஆங்கிலம் 3ம், சித்திரம் 1ம், குடியுரிமை 2ம், செயன்முறை தொ.நு 2ம் |
| உ.ஆன்சுஜீனா | ஹோ.க 3ம், சுகாதாரம் 2ம், சங்கீதம் 1ம் |
| உ.அஸ்வினி | கணிதம் 3ம், புவியியல் 3ம் |
| பா.துலக்சன் | சைவம் 2ம் |
| பா.ஹேமா | சைவம் 3ம், சிங்களம் 3ம் |
| செ.கபில்ராஜ் | சித்திரம் 2ம் |
| ஜெ.டிலக்சன் | சித்திரம் 3ம் |
| தே.தேவலக்சி | சங்கீதம் 2ம் |
| சி.விதுசாளினி | சங்கீதம் 3ம் |
| ந.லஷ்மியா | நடனம் 3ம் |

## தரம் 07

| | |
|---|---|
| 1.சி.தீபிகா | கணிதம் 1ம், வர 1ம், சைவ 3ம், சங் 2ம்,செயன்முறை தொ.நு 3ம், குடியி |
| 2.பி.பிருந்தா | தமி 1ம், சித் 2ம், வர 3ம், சுகா 1ம், சங் 1ம், குடியி 1ம், |
| 3.சு.சர்மியா | தமி 2ம், வை 1ம்,கணிதம் 2ம். விஞ் 2ம், வர 3ம், ஆங். 1ம், |
| 4.ச.மதீசன் | தமி 3ம்,கணிதம் 3ம், சித் 3ம், புவி 2ம், செயன்முறை தொ.நு 1ம் |
| 5.சு.வார்சேயன்சர்மா | விஞ் 1ம், ஆங் 3ம், புவி 1ம், |
| 6ச.றொன்சிகா | கத் 1ம், வர 2ம், ஆங் 2ம், நாட 3ம் |
| 7.த.அபிசா | விஞ் 3ம், கத் 3ம் |
| 8. ஈ.நிறோஜினி | சைவம் 2ம் |
| 9. ம.சுஜீபன் | சுகா 2ம் |
| 10.றொ.குளோட்சாரா | சித் 1ம், சிங்க 1ம் |
| 11.கு.நிலூயன் | சித்திரம் 2ம் இடம் |
| 12. சி.திவ்யா | நடனம் 1ம் இடம் |
| 13. அ.டிறின்ஸ் | நாடகம் 1ம் இடம் |
| 14. ம.ஜான் | சித்திரம் 2ம் இடம் |

தரம் 08

| | |
|---|---|
| 1. கி.றிக்கி அடம்ஸ் | கணிதம் 1ம், தமி 2ம், கத் 1ம்,<br>வர 1ம், ஆங் 2ம், விஞ் 2ம், |
| 2.ஆ.ஜெதுசனா | தமி 1ம், கணி 3ம், கத் 2ம்,<br>நட 3ம், செய் 2ம், சிங் 3ம், |
| 3.செ.அக்சிகா | தமிழ் 3ம், சை 2ம், விஞ் 1ம்,<br>வர 3ம், ஆங் 3ம், சுகா 2ம், |
| 4. எ.றெகானா | சைவ 3ம், ஆங் 1ம் |
| 5. த.அனிஸ்ரன் | சை 1ம்,கணிதம் 2ம், விஞ் 3ம்,<br>சுகா 1ம், சித் 1ம், புவி 3ம், |
| 6. இ.மரியறொசாயினி | கத் 3ம், வர 2ம், நட 2ம்,<br>குடி 3ம், |
| 7. வா.பனுஜா | சங் 1ம் |
| 8. ர.சஜீவன் | சங் 2ம் |
| 9. கு.லக்சிகா | சங் 3ம் |
| 10.பெ.அன்பரசன் | சி. 2ம் |

தரம் 09

| | | |
|---|---|---|
| 1. | ம.சதுர்சன் | கணி 1ம், விஞ்1ம், வர 1ம் சித் 1ம், ஆங் 2ம், சுகா 1ம், |
| 2. | ஜெ.சுலக்சன் | தமி 1ம், விஞ் 3ம், நாட 2ம், புவி 3ம், |
| 3. | தி.திலக்சனா | தமி 2ம், கத் 3ம், ஆங் 1ம், சங் 2ம், குடி 2ம் செய் 3ம் |
| 4. | ர.ரஜிமி | சைவம் 2ம், சங் 3ம் |
| 5. | ஈ.நிசானி | கம் 2ம், செய் 2ம், ச் 1ம் |
| 6. | ஜெ.சஞ்சே | விஞ் 2ம், வர 2ம், சுகா 3ம், சித் 3ம், சித் 3ம், புவி 1ம், |
| 7. | ஞா.கயூரன் | கணி 2ம் |
| 8. | உ.ஐசாக்ஜக் | வர 3ம், சுகா 2ம், நாட 3ம் |
| 9. | ஞா.ஜஸ்மி | ஆங் 3ம், சுகா 2ம், நாட 3ம் |
| 10. | ந.வஜீபன் | சாட 1ம், கணி 3ம் |
| 11. | ர.ராகினி | நாட 1ம் |
| 12. | ஞா.சயிந்தன் | சித் 2ம் |
| 13. | த.தனுசியா | நட 3ம் |
| 14. | ம.வானுஜா | சைவம் 3ம் |

தரம் 10

| | | |
|---|---|---|
| 1. | இ.அஜந்தன் | தமி 1ம் கணி 1ம், சைவ 1ம், விஞ் 1ம், ஆங் 1ம், வணி |
| 2. | டோ.சயந்தி | தமி 2ம் கணி 3ம்,RC1ம், விஞ் வர 2ம், சுகா 1ம், நட |
| 3. | அ.யசிந்தன் | தமி 3ம், சை 3ம்,ICT 3ம், வணி 2ம் |
| 4. | த.அனோ டெஸ்ரன் | கணி 2ம், விஞ் 3ம், சித் 3ம், ICT 2ம் |
| 5. | சி.டொல்மியா | சை 2ம், வர 3ம், ஆங் 2ம், சங் 2ம், புவி 1ம், மனை 2ம் |
| 6. | அ.நிதுசா | RC2ம், ஆங் 3ம், சுகா 2ம், சங் 3ம், குடி 1ம் |
| 7. | ர.நித்தியா | RC 3ம், சங் 3ம், மனை 1ம் |
| 8. | த.லதீஸ் | சித் 2ம் |
| 9. | த.பிரதிக்ஷா | குடி 2ம், சங் 2ம், சுகா 3ம் |
| 10. | ஆ.பிரியதர்சன் | குடி 2ம், சற், 2ம், சுகா 3ம் |
| 11. | தி.றெக்சனா | நட 2ம், புவி 2ம், விவ 1ம் |
| 12. | பெ.கஜன் | நாட 1ம் |
| 13. | பா.அபிஷனா | புவி 3ம், விவ 3ம் |

தரம் 11

| | | |
|---|---|---|
| 1. | யோ.லிண்டா | தமி 2ம் ஆங் 1ம், வர 2ம்,RC3ம், சித் 1ம், குடி 2ம், |
| 2. | யோ.திவ்யா | தமிழ் 1ம், ஆங் 1ம், வர 1ம், ஆங் 3ம், சுகா 3ம், சங் 1ம், |
| 3. | மு.நிலோஜன் | கணி 1ம், விஞ் 2ம், ஆங் 2ம், புவி 3ம்,ICT 1ம் |
| 4. | சி.நிதுசன் | சை 1ம், கணி 2ம், விஞ் 1ம், சங் 3ம், வணி 1ம் |
| 5. | க.மயூரன் | சை 2ம், வர 3ம், நாட 3ம், வணி 2ம் |
| 6. | யு.லிவிந்தன் | புவி 1ம், நாட 1ம், |
| 7. | பி.பிரியங்கா | தமிழ 3ம், சுகா 2ம், நட 2ம் |
| 8. | றே.டெசியா | RC 2ம், சுகா 1ம், நட 1ம் |
| 9. | சி.மேனுசன் | கணி 3ம், புவி 2ம்,ICT 2ம் |
| 10. | சி.றொகீஸ் | விஞ் 3ம், சித் 2ம், குடி 3ம் |
| 11. | ஜெ.ஜெனிற்றா | கி 1ம், மனை 2ம் |
| 12. | ச.றொபேக்கா | வணி 3ம், நாட 2ம் |
| 13. | க.தனுசன் | ICT 3ம், சித் 3ம் |
| 14. | செ.ஜெனிஸ்ரா | சை 3ம், சங் 2ம் |
| 15. | ச.லதுசன் | விவ 1ம் |
| 16. | வி.விதுசன் | விவ 2ம் |

தரம் 12 கலை

| | | |
|---|---|---|
| 1. | டோ.றொசானி | தமி 2ம், வர 1ம் சித் 1ம் |
| 2. | ரா.கிருஷானி | தமி 2ம், இ.நா 3ம், வர 2ம் |
| 3. | உ.பிளசிங் | புவி 2ம், சித் 3ம், ஆங் 2ம், GIT 2ம் |
| 4. | சி.கீதா | புவி 1ம், சங் 3ம் |
| 5. | ஜெ.கீர்த்தனா | இ.நா 2ம், வர 3ம், பொரு 1ம் |
| 6. | சு.சுதர்சினி | சித் 2ம், மனை 3ம் |
| 7. | த.லதுஜா | தமி 3ம் |
| 8. | பா.நாகரூபி | இ.நா. 1ம், மனை 2ம் |
| 9. | க.நாகதர்சினி | புவி 3ம் |
| 10. | கு.லக்சிகா | சங் 1ம், மனை 1ம் |
| 11. | பி.சஞ்சிகா | சங் 2ம் |
| 12. | வா.கஜீபன் | நாட 1ம் |
| 13. | யோ.சஞ்சோ | நாட 2ம் |
| 14. | கு.டிலக்சன் | ஆங் 2ம் |

## தரம் 12 Com

| | |
|---|---|
| த.தனுசன் | வணி 1ம், கண 1ம், பொரு 3ம் |
| அ.சஜீப் | வணி 2ம், கண 2ம், பொரு 2ம் |

## தரம் 12 Sc

| | | |
|---|---|---|
| 1. | ஜெ.மாதுரிகா | பௌ 1ம், இர 1ம், இ.கணி 1ம்,GIT1ம், ஆங் 3ம் |
| 2. | கோ.கஜீனா | பௌ 2ம், இர 2ம், இ.கணி 2ம் |
| 3. | கு.சாரா | பௌ 3ம், இ.கணி 3ம்,GIT 3ம் |
| 4. | ஜோ.கிறிஸ்மினா | இர 3ம், உயி 1ம் |

## தரம் 13

| | | |
|---|---|---|
| 1. | பி.யாழினி | தமி 2ம், நட 1ம், மனை 1ம் |
| 2. | யோ.றோஜினி | தமி 1ம், விவ 1ம், சங் 1ம், ஆங் 3ம் |
| 3. | த.கிருஷாந் | இ.நா 3ம் |
| 4. | மு.நிவேதா | தமி 3ம், நட 2ம், புவி 3ம் |
| 5. | ஜெ.டக்ஷனா | இ.நா 1ம் புவி 1ம் |
| 6. | செ.யசோராஜ் | இ.நா 2ம், சித் 1ம், வர 1ம் |
| 7. | மு.டக்ஷா | நாட 1ம், புவி 2ம் |
| 8. | டெ.டேமியன் | கி.நா 3ம், சித் 2ம், வர 3ம் |
| 9. | பி.பேபிசாளினி | நாட 2ம், கி.நா 2ம் |
| 10. | க.தர்சிகா | கி.நா 1ம், வர 2ம் |
| 11. | பெ.கஜனா | நட 3ம், மனை 2ம் |
| 12. | கு.நிதர்சன் | சித் 2ம் |
| 13. | ஜெ.றம்மியா | சங் 2ம் |
| 14. | அ.பிறின்ஸ் | நாட 3ம் |

## தரம் 13 Com

| | |
|---|---|
| செ.டிலக்சிகா | பொரு, வணி, கண, ஆங் 2ம் |

## தரம் 13 Sci

| | | |
|---|---|---|
| 1. | செ.ஜெல்சன்கோஸ்லி | பௌதீ 1ம், இரச 1ம்,<br>இணை.க 1ம், ஆங் 1ம் |
| 2. | செ.கபிலன் | பௌதீ 2ம், இரசா 2ம் |
| 3. | கு.லிலோச்சனா | உயிரி 1ம் |

## 2017ம் ஆண்டிற்கான க.பொ.த (உ/த) பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்கள்

**கலைப்பிரிவு**

| | | |
|---|---|---|
| க.லக்சியா | ABC | இந்து நாகரிகம் –A , தமிழ் –B , நடனம் –C |
| த.வேணுஜன் | 3B | வரலாறு –B , நாடகம் –B , தமிழ் –B |
| இ.டென்சிகா | 2BC | வரலாறு–B ,தமிழ் –B , மனைப்பொருளியல் –C |
| த.டினிஸ்ரா | 2BC | புவியியல்–B , தமிழ்–B , சங்கீதம்–C |
| வா.தர்மிதா | BCS | இந்து நாகரிகம் –B , தமிழ் –C ,வரலாறு–S |
| சி.மீரா | 3C | புவியியல்–C , வரலாறு –C, தமிழ் –C |
| கோ.கஸ்மியா | 2C S | மனைப்பொருளியல் –C , இந்துநாகரிகம் –C , வரலாறு –S |
| கு.சரிக்கா | 3C | மனைப்பொருளியல்–S , கிறிஸ்தவநாகரிகம் –S , சித்திரம் –S |

வணிகப்பிரிவு

| | |
|---|---|
| இ.விஜிதா . C 2S | வணிகம் –C ,கணக்கியல் –S ,<br>பொருளியல் –S |

2017ம் ஆண்டிற்கான க.பொ.த (சா/த) பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்கள்

| இல | மாணவர் பெயர் | பெறுபேறுகள் |
|---|---|---|
| 01 | ஸ்ரீ.நிதுசன் | 7A , B |
| 02 | யோ.திவியா | 5A, B , C , 2S |
| 03 | ஜோ.லிண்டா | 4A, 2B, 3C |
| 04 | றே.டெசியா | 3A, B , 2C , 2S |
| 05 | க.மயூரன் | 2A , 3B , 4S |
| 06 | ச.றொபேக்கா | 2A, B, 2C, 3S |
| 07 | வி.யசோதரன் | A , B , 4C , 2S |
| 08 | செ.ஜெனிஸ்ரா | A , 2B , C , 4S |
| 09 | மு.நிலோஜன் | 5B, 3C, 5 |
| 10 | சி.றொகீஸ் | 3B , 5C , S |
| 11 | யு.லிவிந்தன் | 3B, 3C , 2S |
| 12 | ஸ்ரீ.மேனுசன் | B , 6C , S |

தமிழ்த்தினப் போட்டியில் கோட்ட மட்டம் (வலயமட்டத்தில்)

வெற்றி பெற்றோர் விபரம் - 2017

| இல | தரம் | பங்குபற்றியோர் | போட்டி |
|---|---|---|---|
| 1. | தரம் 6 | க.சியாநிகா | கட்டுரைப்போட்டி<br>3ம் இடம் |
| 2 | தரம் 11 | ஜெ.மாதுரிகா | இலக்கணப் போட்டி<br>2ம் இடம் |
| 3 | தரம் 11 | டோ.றொசானி | கவிதையாக்கம்<br>3ம் இடம் |
| 4 | தரம் 11 | ச.றொபேக்கா | குறுநாடக ஆக்கம்<br>2ம் இடம் |
| 5 | குழு<br>இசை | | 3ம் இடம் |
| 6 | தரம் 6 | எ.சஜின்மிஸ்ரிகா | தனி நடனம் 3ம் இடம் |
| 7 | தரம் 12 | பெ.கஜனா | தனி நடனம் கோட்டம்<br>1ம், வலயம் 3ம் |

## சைவநெறிப் போட்டியில் கோட்ட மட்டம் (வலயமட்டத்தில்) வெற்றி பெற்றோர் விபரம் - 2017

| இல | தரம் | பங்குபற்றியோர் | போட்டி |
|---|---|---|---|
| 1. | தரம் 12 | மு.டக்ஷா | மாலை கட்டுதல் 3ம் இடம் |
| 2 | தரம் 10 | ர.றஜிதரன் | தோரணம் பின்னுதல் 2ம் இடம் |
| 3 | தரம் 12 | மா.நிதர்சிகா | தோரணம் பின்னுதல் 3ம் இடம் |
| 4 | தரம் 12 | செ.யசோராஜ் | கதாப்பிரசங்கம் 2ம் இடம் |
| 5 | தரம் 12 | சி.கீதா | பண்ணிசை கோட்டம் 1ம், வலயம் 2ம் |

## ஆங்கில தினப் போட்டியில் கோட்ட மட்டத்தில் வெற்றி பெற்றோர் விபரம் - 2017

| இல | தரம் | பங்குபற்றியோர் | போட்டி |
|---|---|---|---|
| 1. | தரம் 12 | ஜெ.மாதுரிகா | Hand writing 2nd place |
| 2 | தரம் 13 | ஜெ.டக்ஷனா | Hand writing 3rd place |
| 3 | தரம் 11 | யோ.திவ்யா | Dictation 2nd place |
| 4 | தரம் 11 | ஜோ.லிண்டா | Solo acting 3rd place |
| 5 | தரம் 12 | டோ.றொசானி | Oratory prepared 2nd place |

## சமூக விஞ்ஞானப் போட்டியில் கோட்ட மட்டம், வலயமட்டம், மாகாண மட்டத்தில் வெற்றி பெற்றோர் விபரம் - 2017

| இல | தரம் | பங்குபற்றியோர் | போட்டி |
|---|---|---|---|
| 1. | தரம் 6 | சி.சிவானுஜன் | கோட்டம் 1ம்,<br>வலயம் 1ம், மாகா 2ம் |
| 2 | தரம் 6 | க.சியாநிகா | கோட்டம் 2ம்,<br>வலயம் 2ம் |

## சிங்கள மொழித்தினப் போட்டியில் வெற்றி பெற்றோர் விபரம் - 2017

| இல | தரம் | பங்குபற்றியோர் | போட்டி |
|---|---|---|---|
| 1. | தரம் 8 | த.அனிஸ்ரன் | வாசிப்பு வலய 1ம் |

## வணிகதின குறுவினாப் போட்டியில் (கோட்டமட்டம்) வெற்றி பெற்றோர் விபரம் - 2017

| இல | தரம் | போட்டியாளர் | நிலை |
|---|---|---|---|
| 1. | தரம் 10 | இ.அஜந்தன் | 2ம் இடம் |
| 2. | தரம் 10 | அ.யசிந்தன் | 3ம் இடம் |

## வணிகதின கட்டுரைப் போட்டியில் (கோட்டமட்டம்) வெற்றி பெற்றோர் விபரம் - 2017

| இல | தரம் | போட்டியாளர் | நிலை |
|---|---|---|---|
| 1. | தரம் 10 | டோ.சயந்தி | 3ம் இடம் |

## கணித ஒலிம்பியாட் போட்டியில் வெற்றி பெற்றோர் விபரம் - 2017

பிரிவு I

| இல | தரம் | பங்குபற்றியோர் | போட்டி |
|---|---|---|---|
| 1. | தரம் 6 | க.சியாநிகா | வலய மட்டத்தில் தெரிவு செய்யப்பட்டவர் |

## 2017 வலயமட்டமெய்வல்லுனர் போட்டியில் வெற்றிபெற்றோர் விபரம்

| வயது | பங்குபற்றியோர் | போட்டி |
|---|---|---|
| 16 வயதுபிரிவு | R.நிரூபன் | குண்டுபோடுதல் 1ம் இடம்ஈட்டிஎறிதல், 2ம் இடம |
| | அ.றியானா | ஈட்டிஎறிதல், 1ம் இடம் |
| | T.றெக்சனா | ஈட்டிஎறிதல் 3ம் இடம் |
| 18 வயதுபிரிவு | S.கனிஸ்ரா | ஈட்டிஎறிதல் 1ம் இடம் |
| | R.தன்சிகா | நீளம் பாய்தல் 2ம் இடம் |
| 20 வயதுபிரிவு | S.கனிஸ்ரா | 4x100mஅஞ்சல் 2ம் இடம் |
| | J.விதுசா | 4x100mஅஞ்சல் 2ம் இடம் |

| | | |
|---|---|---|
| | R. றஜிதா | 4x100mஅஞ்சல்<br>2ம் இடம் |
| | M .நிவேதா | 4x100mஅஞ்சல்<br>2ம் இடம் |
| | B .பேபிசாளினி | 4x100mஅஞ்சல்<br>2ம் இடம் |
| | M . டக்சா | 4x100mஅஞ்சல்<br>2ம் இடம் |

**வலயமட்ட பெரு விளையாட்டு கராத்தே 2017 ஆம் ஆண்டு வெற்றி பெற்ற மாணவர்**

1. குழுக்காட்டா

| | |
|---|---|
| பா.நாகரூபி | வலய மட்டத்தில் 1ம் இடம் |
| ஜெ.கீர்த்தனா | மாகாண மட்டத்தில் 2ம் இடம் |
| ப.சசிகலா | |

2. குழுக் குமிதே

| | |
|---|---|
| பா.நாகரூபி | வலய மட்டத்தில் 1ம் இடம் |
| த.தனுசியா | மாகாண மட்டத்தில் 2ம் இடம் |
| ப.சசிகலா | |

| J/Urumpirai Hindu College<br>Our Academic Staff Details | | | |
|---|---|---|---|
| No | Name | Grade | Qualification |
| 01 | Mr.A.Arunanthisivam | SLPS I | B.A(Hons),PGDE |
| 02 | Mr.T.Naveenthiran | SLPS III | B.Com,PGDE |
| 03 | Mr.S.Pakirathan | SLTS -I | B.Sc,PGDE |
| 04 | Mrs.B.Thiyagalingam | SLTS -I | B.A, PGDE |
| 05 | Mr.S.Gunaratnam | SLTS -I | B.A, Trd.Sci, PGDE |
| 06 | Mr.K.Selvachchanthiran | SLTS 2-II | B.A(Hons) |
| 07 | Mrs.M.Kirushnaraja | SLTS 2-I | B.A,M.Ed,Maths. Dip,PGDE |
| 08 | Mrs.V.Pathmanathan | SLTS 2-I | B.A,PGDE, Trd.Tamil |
| 09 | Miss J.Sakthivel | SLTS 2-I | B.A, M.A(Tamil),PGDE |
| 10 | Mr.M.Sivaseelan | SLTS 2-I | B.BM,PGDE |
| 11 | Mrs.K.Suheethan | SLTS 2-I | B.A(Hons),PGDE |
| 12 | Mr.D. Prabaharan | SLTS 2-I | B.Sc, M.Sc,PGDE |
| 13 | Mrs.A.Senthilkumar | SLTS 2-II | B.A(Hons),M.Ed PGDE |
| 14 | Mrs.L.Mugunthan | SLTS 2-I | B.A(Hons),M.Ed, PGDE |
| 15 | Mrs. K.Kavitha | SLTS 2-II | B.A,M.A |
| 16 | Mr.G.Laguthas | SLTS 2-I | B.FA,PGDE |
| 17 | Mr. S.Gowriesan | SLTS 2-I | B.Com,PGDE |
| 18 | Mrs. L.Dayakeeswararasan | SLTS 2-II | B.Com, HND.IT, PGDE |

| | | | |
|---|---|---|---|
| 19 | Mrs.M.Kumaradevan | SLTS 2-II | Trd.Eng |
| 20 | Miss.I.Vallipuram | SLTS 2-I | B.FA |
| 28 | Mr.V.Venukaran | SLTS 3-II | Trd.Phy.Edu |
| 21 | Mrs.B.Santhirakasan | SLTS 2-I | Dip.in.Teaching Science |
| 22 | Miss.V.Vaithilingam | SLTS I | Trd.Home.Eco |
| 23 | Mr.T.Jasotharan | SLTS 2-I | B.Sc,PGDE |
| 24 | Mrs.A.Kugaparan | SLTS 2-I | B.FA,PGDE |
| 27 | Mr.V.Jeganathan | SLTS 2-II | Dip.in.Teaching,B.A,PGDE |
| 25 | Mrs.S.Sritharan | SLTS 2-I | B.FA,PGDE |
| 26 | Mr.R.J.Sutharsan | SLTS 2-I | B.Com(Hons), PGDE |
| 29 | Mrs.Y.Prakash | SLTS 3-I | Dip.in.Teaching Agri |
| 30 | Mrs.M.Mohanarasan | SLTS 2-I | B.Sc, PGDE |
| 31 | Mr.T.Visakan | SLTS 2-I | B.Sc, PGDE |
| 32 | Miss.P.Sinnathurai | SLTS 2-II | B.A(Hons) |
| | | | |

**Our Non Academic Staff Details**

| | | | |
|---|---|---|---|
| 01 | Mr. K. Srisunmuganathan | Grade –I Lab.Assist | |
| 02 | Mrs.D. Subash | Grade -II | |
| 03 | Mr.R.Pirabaharan | Grade -I | |
| 04 | Mr.S.Dimelraj | Grade -II | |

# பரிசளிப்பு விழாவிற்கு நிதி உதவி வழங்கியோர்

- திரு.கதிரவேலுபத்மசீலன் - ஞாபகர்த்தம்
- திருமதி. கமலாசத்தியானந்தன் - அன்பளிப்பு
- அமரர் ந.தேவராசன் குடும்பம் - அன்பளிப்பு
- திருமதி S.இளையதம்பி - ஞாபகர்த்தம்
- திருமதி. , பொன்னுத்துரைநாகமுத்து - ஞாபகர்த்தம்
- அமரர் பாலுசின்னத்தம்பி ஞாபகர்த்த அன்பளிப்பு

–திரு சி.டிகுகுமார் ஆசிரியர்

- திருமதி.P.நாகம்மா - அன்பளிப்பு - அன்பளிப்பு
- திருமதி. சிவபாலசுந்தரம் தர்மகுணபவானி - அன்பளிப்பு
- வைத்தியகலாநிதிவைரவநாதன் வல்லிபுரம் - அன்பளிப்பு
- திருமதி.மகேஸ்வரிகுணசிங்கம் - ஞாபகர்த்தம்
- திருமதி.சாரதாதேவிபேராயிரவர் - அன்பளிப்பு
- அமரர் வைத்தியகலாநிதி ஸ்ரீரங்கநாதன் குடும்பம் ஸ்ரீ - அன்பளிப்பு
- அமரர் அ.வைத்திலிங்கம் அதிபர் குடும்பம்
- அமரர் திரு. பொன்னம்பலம் ஆசிரியர் ஞாபகார்த்தஅன்பளிப்புதிரு.க.சின்னராசா
- கனடா பழைய மாணவர்
- லண்டன் பழைய மாணவர்
- அமரர். Dr. C. இந்திரராஜா அவர்களின் ஞாபகார்த்தமாக குடும்பத்தினர் அன்பளிப்பு

ശ്രീ [illegible]

ശ്രീ [illegible]

ശ്രീ [illegible]

# கல்லூரிக் கீதம்

மலர்கலை உரும்பிராய் இந்துக் கல்லூரி
வான்புகழ் ஓங்கியே வாழ்க
மெய்ஞ்ஞான மன்றில் விளைஞானத் திருவை
விஞ்ஞானம் நல்கிட வாழ்க!
ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
உண்மையை மாணவர்க் குணர்த்து
மெய் மகா வாக்கியமாக
மெய்ப் பொருள் காணுவதறிவு
விளங்க நிரந்தரம் வாழ்க!
மணிக்கொடி உரும்பிராய் மாநகர் எடுத்தே
வான்புகழ் ஓங்கியே வாழ்க!
வாழ்க! வாழ்க! வாழ்க!
இந்துக் கல்லூரி வாழ்க!
எங்கள் கல்லூரி வாழ்க!